# THE MESSAGE OF THE HOUR OUTREACH

**CALEB JOSHUA**
Tele : 04630 456157

**"HOREB"**
**SRIVAIKUNTAM – 628 601**
**THOOTHUKUDI DIST.**

பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் எழுதுகிறதாவது.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

1. **ஆண்டு 2000, ஆகஸ்டு மாதம் என்னிடமிருந்து :**

அ. 1963 ல் எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டதா?

ஆ. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் அந்நிய அக்கினி ஸ்தம்பம்.

இ. மும்பை, சகோ.டேனியல் கிறிஸ்டியான் ஊழியத்தில் தோன்றும் அக்கினி ஸ்தம்பம் தேவனுடைய பிரசன்னம் தான் என்பதை ஆவிக்குரிய, விஞ்ஞான ரீதியில் நிரூபிக்க அவரை கேட்டுக்கொண்ட சுற்றறிக்கை.

**மேலும் டிசம்பர் மாதம் என்னிடமிருந்து :**

ஈ. புதுக்கோட்டை - பாஸ்டர் S.ஜெயராஜ் பினாமி திருநெல்வேலி, சகோ.M.மணி தலைக்கல் வந்துவிட்டது, கர்த்தருடைய வருகை நிகழ்ந்து விட்டது என்று வெளியிட்ட இரு சுற்றறிக்கைகளுக்கு ஆவிக்குரியப் பதில்கள்.

உ. சகோ.டேனியேல் கிறிஸ்டியான் தொலைக்காட்சி விமர்சனத்திற்கு கர்த்தருடைய வார்த்தை மற்றும் தீர்க்கதரிசியின் செய்திகள் அடிப்படையில் பதில்கள்.

ஊ. மேலும் சகோ.டேனியேல் என்னைக் குறித்து வெளியிட்ட சுற்றறிக்கைக்குப் பதில்கள்.

ஆக, பல மாதங்களாக, பலமணி நேரங்கள் என் சிந்தையை ஆவியானவரோடு ஒருமுகப்படுத்தி, மிக்கப்பிரயாசப்பட்டு இந்த ஆறு சுற்றறிக்கைகளையும் தொகுத்து எனது பொருளாதார நிலையையும் மிஞ்சி அவ்வப்போது ஜெராக்ஸ் நகல்கள் எடுத்து உங்களுக்கு அனுப்பிவைத்தேன். அவைகள், காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று இன்றைய ஊழியங்களையும், ஊழியர்களையும், உபதேசங்களையும், போதனைகளையும் ஆராய்ந்து நிதானிக்க உங்கள் ஆத்துமாவுக்குப் பிரயோஜனமாயிருந்திருக்குமென கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

2. சகோ.M.மணியிடமிருந்து 6.1.2001 அன்று மதியம் எனக்கு போன் வந்துள்ளது. அப்பொழுது நான் வீட்டில் இல்லை. என் வீட்டார், நான் மாலையில் வீடு திரும்புவேன், ஆதலால் இரவில் என்னுடன் தொடர்பு கொள்ள அவரைக் கேட்டுக் கொண்டனர். நான் வீடு வந்தவுடன், விபரம் அறிந்து அவரது போனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவரிடமிருந்து போன் வரவில்லை.

3. சகோ.மணியிடமிருந்து இரண்டாவது முறையாக 7.1.2001 அன்று காலை போன் வந்துள்ளது. அந்த சமயமும் நான் வீட்டில் இல்லை. அவர், என் மகனிடம் எனது சுற்றறிக்கைகளைக் குறித்துப் பேச, அவன் அது குறித்து என்னிடமே பேசிக்கொள்ள வேண்டும் எனக் கூறிவிட்டானாம்.

4. 10.1.2001 அன்று மதியம் நான் வீட்டில் இருந்த சமயத்தில் போன் வர, நான் எடுத்தேன். சகோ.காலேப் யோசுவா இருக்கிறாரா என ஒரு முரட்டுக்குரல் ஒலித்தது. சகோ.காலேப் யோசுவா என்று அழைத்ததால், அவர் ஒரு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாக இருக்கவேண்டும் என நினைத்து, **Praise the Lord brother** காலேப் யோசுவா பேசுகிறேன் என்றேன். திருநெல்வேலி சகோ.மணியைக் குறித்து எழுதியிருக்கிறீரே, அது என்ன என்று அந்தக் குரல் தொனிக்க : நான், பேசுகிற நீங்கள் யார் எனக் கேட்க : அதற்கு பிரதியுத்திரமாக யார் பேசுகிறது என அறியவேண்டுமோ என பதில் வர : நான், யார் பேசுகிறது எனத் தெரியாமல் எப்படி பதில் கொடுக்க முடியும், சகோ.மணி குறித்து பேசும் நீங்கள் யார் என்று முதலில் நான் அறியவேண்டும் என்று பதில்கொடுக்க : உடனே நான்தான் பிரதர் மணி பேசுகிறேன் என தன் சுய குரலில் பேச ஆரம்பித்தார். நான் சொல்விளங்கு மணவாட்டி என்று எழுத உமக்கு என்ன யோக்கியதை இருக்கு? நீர் பாலாசீர் லாறி பின் சென்றதும், உம்மை சகோ.ஜோசுவா கோடட்டி தடுத்து நிறுத்தியதும் எனக்குத் தெரியாதா? உம்மைக் குறித்து ஒரு சுற்றறிக்கை தயாராகிக்கொண்டு வருகிறது என்றார். நான், அதைக் குறித்து பயப்படப் போவது இல்லை, உங்கள் சுற்றறிக்கையை நான் பெற்ற பின், அதற்கு ஏற்ற பதிலை, ஏற்ற வேளையில் கொடுப்பேன் என்றேன். உடனே நீ யாரய்யா நான் சொல்விளங்குவின் மணவாட்டி

என்று எழுத என மரியாதைக் குறைவாகப் பேசினார். நான் பதில் கொடுக்காமல் போனை கீழே வைத்துவிட்டேன்.

5. இந்நிலையில், இந்நாட்களில் சகோ.மணியுடன் ஐக்கியத்தில் உள்ள, எனக்கு அறிமுகமான ஒரு சகோதரனிடமிருந்து எனக்கு கடிதம் வந்தது. அதில் அவர் அநேக காரியங்களைக் குறித்து எழுதியிருந்தார். அதில் முக்கியமாக தீர்க்கதரிசியின் செய்திகளிலிருந்து இரு செய்திகளை எடுத்து, அதில் சில பகுதிகளைச் சுட்டிக்காட்டி அதில் கர்த்தருடைய வருகை, எடுத்துக்கொள்ளப்படுதல் போன்ற மகத்தான காரியங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளது என எழுதியிருந்தார். அவையாவன :

அ. **கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்**. பக்கங்கள் 123 - 125.
ஆ. ***கடல் பயணத்தில் சாட்சி***. பக்கங்கள் 113 - 115.

6. நான் **கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்** என்ற செய்தியில் பக்கங்கள் 123 - 125 களை தியானிக்கும்போது, தீர்க்கதரிசி **Headship** என்று எதைக் கூறுகிறார் என்பதை எனது சகோதரன் ஆவிக்குரிய ரீதியில் புரிந்து கொள்ளவில்லை எனத் தெரிந்தது. இவர் தீர்க்கதரிசி **Headship & Headstone** என்று குறிப்பிடும் இரண்டு வார்த்தைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ளாமல் புலம்புகிறார், தன்னைத்தானே வஞ்சித்துக் கொண்டிருக்கிறார். இங்கு தீர்க்கதரிசி **Headship** என்று பரிசுத்த ஆவியைக் கூறுகிறார். **Headship** தலைக்கல் அல்ல.

7. நீங்கள், **ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி** என்ற செய்தியில் கூர் நுனிக்கோபுர வரைபடத்தைக் காணலாம். அதில் சகோதர சிநேகம், அன்பு - இந்த இரண்டிற்கும் இடையே பரிசுத்த ஆவி உண்டு. ஆனால் நமது தமிழ் மொழிபெயர்ப்பில் பரிசுத்த ஆவி இல்லை. ஏனென்றால் இந்த செய்தியை மொழிபெயர்த்தவரிடம் பரிசுத்த ஆவி இல்லை. இந்தப் பகுதியை நீங்கள் ஆங்கிலத்தில் வாசித்தால் அங்கு **Brotherly Kindness, Love** - இந்த இரண்டிற்குமிடையில் **Holy Spirit** உள்ளது. இந்த பரிசுத்த ஆவியைத்தான் தீர்க்கதரிசி **Headship** எனக் கூறுகிறார். இந்த பரிசுத்த ஆவிதான் சரீரத்தையும், தலைக்கல்லையும் (**Love**) இணைக்கிறது. இந்த தலைக்கல் ஏன் தனியாக நிற்கிறது என்றால், அது நுனிக்கோபுரத்தின் மேல் ஒருபோதும் வைக்கப்படவில்லை. அந்த தலைக்கல்லானது புறக்கணிக்கப் பட்டுவிட்டது. மாற். 12:10

8. மேலும் **கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார்**. என்ற செய்தியில் பக்கம் 124 ல் முதல்பத்தி : பக்கம் 125 ல் மூன்றாவது பத்தியை இவர் ஆதாரமாகக்கொண்டு, அங்கு தலை (**Headship**) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதை தலைக்கல் (**Headstone**) எனத் தவறாக அர்த்தம்கொண்டு, தலைக்கல் வந்துவிட்டது என்கிறார். மேலும் இந்தச் செய்தி 1963 ல் பிரசங்கிக்கப் பட்டதால் 1963 ல் தலைக்கல் வந்துவிட்டது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்கிறார். இவருடைய இந்த சுய கருத்து செய்திக்கு முற்றிலும் முரணானது. இந்தச் செய்தியை நீங்கள் ஆங்கிலத்தில் வாசித்தால் **The Headship is here, Christ, the resurrected Lord** என இருக்கிறது. தீர்க்கதரிசி உயிர்த்தெழுந்த கர்த்தர், கிறிஸ்து இங்கு இருக்கிறார் எனக் கூறுகிறார். அதாவது பரிசுத்த ஆவியை அவர் அவ்வண்ணமாகக் கூறுகிறார். அவர் தலைக்கல் (**Headstone**) குறித்து அவ்வண்ணமாகக் கூறவில்லை.

9. இதை, நீங்கள் **Q & A 291** ல் பத்தி 118 ல் வாசித்தால் புலனாகும். அங்கு **The Headstone is yet to come** என உள்ளது. அதாவது தலைக்கல் இனி வரவேண்டியதாயிருக்கிறது என உள்ளது. இந்தக் கேள்வி பதில் 23.8.1964 ல் பிரசங்கிக்கப்பட்டது. தீர்க்கதரிசியின் செய்தி ஓரிடத்தில் 1963 ல் தலைக்கல் இங்கே இருக்கிறது, வந்துவிட்டது என்றும் : மற்றொரு இடத்தில் 1964 ல் தலைக்கல் இனி வரவேண்டியதாயிருக்கிறது என்றும் கூறினால், அது முரண்பாடு அல்லவா. பிரியமானவர்களே, தீர்க்கதரிசியின் செய்தியில் முரண்பாடு இருக்கக் கூடாதே. நீங்கள் செய்தியை புரிந்துகொள்வதில்தான் முரண்பாடு இருக்கிறது. அது என்ன? முரண்பாட்டின் வித்து உங்களுக்குள் கிரியை செய்கிறது. சாத்தான் உங்களை வஞ்சிக்கிறான். நீங்கள் வஞ்சிக்கப்படுகிறீர்கள். எவ்வாறு வேதவாக்கியங்களை அறிந்துகொள்ள ஒருவனுடைய மனக்கண் திறக்கப்பட வேண்டுமோ லூக். 24:45, அவ்வண்ணமாகவே தீர்க்கதரிசியின் செய்திகளையும் புரிந்துகொள்ள ஒருவனுடைய மனக்கண் திறக்கப்பட வேண்டும். ஏன் என்றால் தீர்க்கதரிசியின் செய்தி தேவனுடைய சத்தம்.

10. இவர் குறிப்பிடும் ***கடல் பயணத்தில் சாட்சி***, பத்தி 113 - 115 ல் கர்த்தருடைய வருகை வந்து விட்டது என்பதை உறுதிப்படுத்தும் தடயங்கள் எதுவும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

11. ஒருவன் ஒரு கல்லில் ஒரு சொரூபத்தை உருவாக்கி, இதுதான் என் தெய்வம், இதுதான் என் சிருஷ்டி கர்த்தா, இதுதான் என் ஆராதணைக்குரியவர் : இது என் விசுவாசம் என்று கூறினால் நாம் அவனை என்ன செய்யமுடியும்? அது ஒரு கல், அதை வணங்கலாமா என்று சொல்ல தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை : அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. வஞ்சிக்கப்பட்ட மனம்

அவனை மோசப்படுத்தினது. இதுதான் என்னுடைய சகோதரனுடைய கதியும். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் என்று சாதிக்கும், விசுவாசிக்கும் சகோதரனை நாம் என்ன செய்யமுடியும்? சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். 2தெச. 2:11 & 12 வசனம் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இந்நாட்களில் நிறைவேற வேண்டுமே.

12. சகோ.வில்லியம் மாரியன் பிரன்ஹாமை கிறிஸ்து என விசுவாசத்தினால் அழைத்து, நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தராகிய பிரன்ஹாம் கிறிஸ்துவையே சேவிப்போம் என்று கூறும் கும்பலைக் குறித்து சகோ.பிரன்ஹாம் இது பிசாசினுடைய பயங்கரமான, வெட்கக்கேடான, தேவபக்தியற்ற ஒரு பொய்யாகும். அப்போதகம் சத்தியத்திற்கு விரோதமான நெறி பிறண்டதாயிருக்கிறது. அது பொய்யானதாக இருக்கிறது. **கர்த்தர் உரைக்கிறார்** அது முறைகேடானதாக இருக்கிறது, அப்படிப்பட்டதோடு எந்தவித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதீர்கள் என்று எச்சரிக்கிறார். அப்படியிருந்தும் அந்தக்கும்பல் சகோ.பிரன்ஹாம் தான் கிறிஸ்து, அது எங்கள் விசுவாசம், எங்கள் விசுவாசம் எங்களை இரட்சிக்கும் என்று கூறியே மடிந்து போனார்கள். இன்று அவர்கள் விலாசம் தெரியவில்லை.

13. அதே மாதிரிதான் முன்னாள் சகோ.பாலாசீர் லாறியின் மணவாட்டி பாஸ்டர் S.ஜெயராஜ் மற்றும் அவரது கூட்டத்தார்கள். 1964 ல் தலைக்கல் இனி வரவேண்டியதாயிருக்கிறது என்று சகோ.பிரன்ஹாம் பிரசங்கித்தாலும், 1965 ல் சகோதரரே, வரப்போகும் அந்த எடுத்துக் கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறோம். முதலாம் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்து விட்டது, இரண்டாவது இப்பொழுது அருகில் உள்ளது என்று பிரசங்கித்தாலும் : 1963 ல் தலைக்கல் வந்துவிட்டது, கர்த்தருடைய வருகை வந்துவிட்டது, இனி எங்களுக்கு ஞானஸ்நானம் தேவையில்லை, இராப்போஜனம் தேவையில்லை, எங்கள் மத்தியில் ஐந்து வகை ஊழியங்கள் தேவையில்லை, நாங்கள் பூரண புருஷராகிவிட்டோம், இது எங்கள் விசுவாசம். ஆதலால் உங்கள் உபதேசங்கள் எங்களுக்குத் தேவையில்லை எனக்கூறி ஆழ்கடலில் உடல் முழுவதும் மூழ்கி, தலை மூழ்கப்போகும் நிலையில் இருக்கும் இவர்களை மரணத்தின் நின்று காப்பாற்ற நினைத்தால், நாங்கள் மடிந்துபோவோம் ஆனாலும் எங்களுடைய இந்த விசுவாசத்தை விட்டுவிட மாட்டோம் என்பவர்களை நாம் என்ன என்று சொல்வது? கடைசி நாட்களில் மனுஷர்கள் வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், இணங்காதவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும் இருப்பார்கள் என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறுகிறது என்றுதான் நினைக்கத்தோன்றுகிறது.

14. மும்பை, சகோ.தேவதாஸ் 10.1.2001 அன்று இரவு என் வீட்டிற்கு வந்தார். நான் அவரிடம் சகோ.டேனியேல் கிறிஸ்டியான் சுற்றறிக்கைக் குறித்துப் பேசலானேன். அவர் இதுவரை தனக்கு அந்த சுற்றறிக்கை கிடைக்கவில்லை எனக் கூறினார். சகோ.டேனியேல் சுற்றறிக்கையின் மீது எங்கள் உரையாடல் இரவு 9மணி முதல் மறுநாள் காலை 3மணி வரை நடந்தது. அந்த சுற்றறிக்கையை வாசிக்க, வாசிக்க சகோதரன் மனம் மிக்க புண் பட்டது. ஓரிரு சம்பவங்களில் சகோ.டேனியேலை மிக்க தாறுமாறாகத் திட்டவும் செய்தார். ஏனென்றால் அந்த அளவுக்கு சுற்றறிக்கை பொய்யையும், புரட்டையுமே அரணாகக் கொண்டிருக்கிறது. சம்பவங்கள் யாவும் சகோ.டேனியேலை மேன்மை படுத்திக்காட்ட ஜோடிக்கப்பட்டதாயிருக்கிறது. உண்மை எங்கேயாகிலும் இருக்குமா என அந்த சுற்றறிக்கையில் தேடிக் கண்டுபிடிக்கவேண்டிதாயிருக்கிறது.

15. அவருடைய சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கும் அநேக சம்பவங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானது. ஆதலால்தான் அதில் சில முக்கியமான சம்பவங்களை உண்மை என்று நிரூபித்தால் நான் ஊழியத்தை விட்டு விலகுகிறேன் என்று அவருக்கு தெரிவித்துள்ளேன். சகோ.தேவதாஸ் தான் அறிந்து, உண்மைக்குப் புறம்பானது என்று ஏற்றுக்கொண்ட முக்கியமான சில சம்பவங்களை மட்டும் கீழே தருகிறேன். அத்துடன் சகோ.டேனியேல் சுற்றறிக்கையின் பக்கங்களையும் குறிப்பிடுகிறேன்.

அ. சகோ.தினகரன் விபத்து பற்றிய சொப்பனம். (பக்கம் 2)
ஆ. ஐந்து பேருக்கு தவறான ஞானஸ்நானம் (பக்கம் 2)
இ. முலுண்ட் சபை ஆரம்பம். (பக்கம் 2&3)
ஈ. என் மனைவியின் ஞானஸ்நானத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள். (பக்கம் 5)
உ. நான் சகோ.பாலாசீர் லாறியை மனுஷகுமாரன் என ஏற்றுக்கொண்டு, அவருடைய ஊழியத்துக்கு துணைபோனதாக கூறப்படும் சம்பவம். (பக்கம் 6)
ஊ. கோழிப்பாறை Rs.100/- காணிக்கை சம்பவம் (பக்கம் 7)
எ. என் வீட்டில் சபை கூட நான் மறுப்பு தெரிவித்ததாகக் கூறப்படும் சம்பவம் (பக்கம் 9)

16. திம்மராஜபுரம் (பாளையங்கோட்டை) பாஸ்டர்.S.ஸ்டீபனை நான் 11.1.2001ல் காலை சந்திக்க சமயம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் எனது சுற்றறிக்கைகள் அனைத்திலும் பல ஜெராக்ஸ் நகல்கள் எடுத்து தனக்கு அறிமுகமான சிலருக்கு அனுப்பவேண்டும் எனக் கேட்டிருந்தார். ஆதலால் நான் பாளையங்கோட்டை செல்லவேண்டியதாயிருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பிரயோஜனப்படுத்தி அங்கு

சகோ.தேவதாஸையும் கூட்டிக்கொண்டு சென்றேன். சகோ.டேனியேல் சுற்றறிக்கையிலுள்ள கற்பனைச் சம்பவங்களை சகோ.தேவதாஸ், பாஸ்டர். ஸ்டீபனுடன் சாட்சியாக பகிர்ந்துகொண்டார்.

17. இந்நாட்களில், நான் சென்னையிலிருந்த சமயத்தில், 17.1.2001 அன்று, தற்செயலாக சென்னை - ஆவடி பாஸ்டர் ஆமோஸ் பாஸ்கரனுடன் **WBGNS** சென்றேன். அங்கு கர்த்தருடைய சித்தத்தின்படி சகோ.அந்தோணி (டோனி) ஆப்மாவை (கனடா) சந்திக்க நேர்ந்தது. சகோ.டோனி என்னைக் கண்டவுடன் **Hallo, great man** என்று கூற, நான் அவரை **Hallo, big man** என்று கூறினேன். அவர் என்னை நீ நீளமான சுற்றறிக்கைகள் வெளியிடுகிறாய், ஆதலால் நீதான் **great man** என்று கூற, நான் உம்மிடம் பணம் அதிகம் உள்ளது, ஆதலால் நீர்தான் **big man** என்று கூற, எங்கள் சந்திப்பின் ஆரம்பம் ஒரு நகைச்சுவைக் கட்டமாக இருந்தது.

18. பின், அவர் என்னிடம் **WBGNS** ன் பணிகள் சிறப்பாக நடக்கிறதா என்று கேட்க, நான் தமிழ் மொழிபெயர்ப்பு படுமோசம், இது தீர்க்கதரிசியின் செய்தியை இரண்டாந்தரமாக்கிவிட்டது எனக்கூறினேன். அவர், நீ ஒருவன்தான் தமிழ் மொழிபெயர்ப்பை குறை கூறுகிறாய், மற்றபடி யாருமே இதுவரை எங்களிடம் மொழிபெயர்ப்புகளில் தவறுகள் உள்ளதாகக் கூறியதே இல்லை என்றார். அதற்கு நான், நான் செய்தியை அதிகமாக நேசிக்கிறேன். ஆதலால் மொழிபெயர்ப்பில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்கூறுகிறேன் : ஆனால் நீ கூறும் மற்றவர்கள் உன் பணத்தை நேசிக்கின்றனர், ஆதலால் அவர்கள் மொழிபெயர்ப்பில் உள்ள குறைபாடுகளை கண்டுக் கொள்வதில்லை என்றேன். உடனே சகோ.டோனி நீ வைத்திருக்கும் பைபிள் முதல் தரமானதா அல்லது இரண்டாந்தரமானதா என்றார். நான் **King James Version** முற்றிலும் சரியானது என தீர்க்கதரிசி கூறுவதால், நான் வைத்திருக்கும் பைபிள் முதல் தரமானதுதான் என்றேன். ஆனால் சகோ.டோனியின் எண்ணம் பைபிள் முதல் தரமானது அல்ல என்பதாகும். இதிலிருந்து இவர் எந்த அளவுக்கு ஒரு ஆவிக்குரிய மனுஷன் என்பதை என்னால் அந்த நேரத்தில் நிதானிக்க முடிந்தது.

19. சகோ.டோனி உண்மையாகவே ஒரு தேவனுடைய மனுஷனாக இருந்திருப்பாரானால், என்னிடம் சகோதரனே தமிழ் மொழிபெயர்ப்புகளில் எங்கெங்கு தவறுகள் உண்டு, அதைக்கூறுங்கள், நாம் முதலில் அவைகளை சரிப்படுத்துவோம், அதன்பின் மேலும் தவறுகள் நடக்காவண்ணம் பார்த்துக்கொள்வோம் என்று கூறியிருக்கவேண்டும். இதை விட்டுவிட்டு தமிழ் மொழிபெயர்ப்புகளில் வரும் தவறுகளை நியாயப்படுத்த, பைபிள் மொழிபெயர்ப்புகளும் தவறுகளை கொண்டதே எனக் கூறும் ஒரு மனிதனிடம் நாம் என்ன நன்மைகளை எதிர்பார்க்க முடியும்?

20. இங்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே என்ற தலைப்பில் சென்னை, மணவாட்டி கூடாரம், **கிறிஸ்துவின் மணவாட்டியின் காணமுடியாத இணைப்பு** என்ற செய்தியை மொழிபெயர்த்து வெளியிட்டார்கள். இதை நித்திரையடைந்த சகோ.லெஸ்லி பீட்டர் மொழிபெயர்த்தார் என நினைக்கிறேன். இந்தச் செய்தியில் 68 வது பக்கம், 2 வது பத்தியில் ஆங்கிலத்தில் உள்ள **It wouldbe God working in human flesh again** என்று உள்ளதை **அது தேவன் மறுபடியுமாக மனித மாம்சத்தில் வருவார்** என மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. அதாவது இந்த மொழிபெயர்ப்பு மறைமுகமாக சகோ.பிரன்ஹாமை மனுஷகுமாரனாக்குகிறது. இந்த தவறை சகோ.யோவேல் முடி பரமானந்தத்திடம் எடுத்துக் கூறினேன். ஏனென்றால் இந்த வெளியீட்டில் அவருக்கும் ஒரு முக்கியப் பங்கு உண்டு. உடனே அவர் மொழிபெயர்ப்பின் தவறை உணர்ந்து, கைவசம் உள்ள அனைத்து பிரதிகளிலும் தவறை திருத்தி விநியோகம் செய்யும்படி தன்னுடைய அலுவலகத்தில் உள்ளவர்களைக் கேட்டுக்கொண்டார். இதுதான் ஒரு ஆவிக்குரிய மனிதனின் லட்சணம். இதை விட்டுவிட்டு மொழிபெயர்ப்பு தவறுகளை நியாயப்படுத்த பரிசுத்த வேதாகம மொழிபெயர்ப்பை உதாரணமாக கொள்ளும் சகோ.டோனியின் ஞானம் லௌகீக சம்பந்தமானது.

21. அடுத்து சகோ.டோனி என்னிடம், நீ அவ்வப்போது மொழிபெயர்ப்புகளில் உள்ள தவறுகளை ஏன் எங்களுக்குத் தெரிவிக்கவில்லை என்று கூற நான் உங்களுக்கு பலமுறை இதுகுறித்து லெட்டர் எழுதி **WBGNS** ல் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவும் முன்னாள் சகோ.பாலாசீர் லாறி மணவாட்டிகள், கிறிஸ்து பிரன்ஹாமின் மணவாட்டிகள், இவர்களை தூக்கி வெளியே எறியவும் கேட்டுக்கொண்டேன். ஆனால் அது செவிடன் காதில் சங்கு ஊதிய நிலையாகிவிட்டது என்றேன். உடனே அவர், உன் கடிதங்கள் யாவும் நாங்கள் பதில் கொடுக்க தகுதியற்றவைகளாயிருந்தது என்றார். நான் அவரை நோக்கி, நீ உன் தலைக் கர்வத்தில் இவ்வாறு பிதற்றுகிறாய் என்றேன். உடனே அவர், எனக்கு மேலே கம்ப்யூட்டர் செக்ஷனில் வேலை இருக்கிறது என்று கூறிச் சென்றுவிட்டார்.

22. அங்கு நின்றுகொண்டிருந்த சகோ.தயாளந்தத்திடம் நீங்களும், சகோ.டோனியும் சேர்ந்து **WBGNS** மூலம் விசுவாசிகள் மத்தியில் குருப்பிசம் உருவாக்கி, விசுவாசிகளையும் ஊழியக்காரர்களையும் பிரித்து பட்சபாதத்துடன் நடந்துவருகிறீர்கள் என்றேன். அதற்கு விளக்கமும் கொடுத்தேன். உதாரணமாக **E book** நூற்றுக்கணக்கில் ஊழியர்களுக்கு என்று அன்பளிப்பாக வந்தது. அதை நீங்கள்

உங்களுக்கு பிரியமான ஊழியர்களுக்கும் விசுவாசிகளுக்கும் கொடுத்தீர்கள். ஒரு சிலருக்கு மிக்க தாராள மனப்பான்மையுடன் இரண்டு கொடுத்தீர்கள். இது யார் யாருக்கு பிரயோஜனம் நின்று நிதானிக்காமல் உங்கள் மனம்போன போக்கில் விநியோகம் செய்தீர்கள். ஆனால் என்னைப் போன்ற சில ஊழியர்கள் உங்களால் புறக்கணிக்கப்பட்டனர். இதென்ன? பாரபட்சம் தானே ! இதை சகோ.தயானந்தத்திடம் நான் கூற, அவர் சகோ.டோனி எங்களது **Managing Director**. அவர் என்ன சொல்கிறாரோ அதன்படிதான் நாங்கள் செய்வோம், நாங்களாக எதுவும் செய்யமுடியாது என்றார். அப்படியானால் நான் ஒன்று கேட்கிறேன், இந்த **E book** களை சகோ.டோனி தன் வீட்டுச சொத்திலிருந்தா வாங்கினார்? இதை ஊழியர்களில் இன்னாருக்கு கொடு, இன்னாருக்கு கொடுக்காதே என்று கூற. **WBGNS** ன் இன்றைய சீர்கெட்ட நிலைக்கு நீங்கள் இருவருந்தான் காரணம் எனக் கூறிச்சென்றேன். உண்மையும், உத்தமமும் பாரபட்ச குணமில்லாத ஆவிக்குரியவர்கள் **WBGNS** பணிகளை ஏற்று நடத்தாத வரையில், மேலும் சகோ.டோனி, சகோ.தயானந்தம் இருவரையும் **WBGNS** ஐ விட்டுவெளியே எறியாத பட்சத்தில் **WBGNS** ஒருக்காலும் உருப்படவே உருப்படாது.

23. சகோ.தயானந்தம் **WBGNS** ல் பதவியேற்றபின் பொதுவாக எனக்கு புதிதாக பிரிண்ட் ஆகும் செய்திப் புத்தகங்களை அனுப்புவதே கிடையாது. நானாக, எனக்கு இந்த இந்தப் புத்தகங்கள் இத்தனை இத்தனை வேணும் என்று கேட்கும் பட்சத்தில், நூறு பிரதிகள் கேட்டால் ஏதோ எனக்கு பிச்சைப் போடுவதாக நினைத்து 20/25 பிரதிகள் அனுப்பிவைப்பார். நான் ஆங்காங்கு சொல்லும்போது அங்கு ஊழியர்களிடமிருந்து புதிதாக வெளியிடும் செய்திப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வேன். உதாரணமாக, **கடல் பயணத்தில் சாட்சிகள்** என்ற செய்தியை நான் தற்சமயம் சென்னையில் இருந்தபோது பாஸ்டர் S.P.ஜாண் சாமுவேலிடமிருந்து இரு பிரதிகள் பெற்றுக்கொண்டேன். ஆனால் கடந்த 2/3 மாதங்களுக்கு முன் இந்த செய்தியை நான் ஒரு அரைகுறை விசுவாசி வீட்டில் கண்டேன்.

24. நான் சென்னை VOG நிர்வாகத்தையும் கவனித்தேன். அங்கு இப்படிப்பட்ட பாரபட்ச குணம், குருப்பிசம் கிடையாது. அமெரிக்காவிலிருந்து டேப்ரெக்கார்டர்கள் வந்தது. ஒரு டேப்ரெக்கார்டர் வாங்க வசதி வாய்ப்புகள் இல்லாத ஊழியர்களுக்கு கொடுத்து உதவினார்கள். அவர்களுக்கு அறிமுகமான ஊழியர்களுக்கு அவர்களே கொடுத்தார்கள். அவர்களுக்கு அறிமுகமாகாத ஊழியர்களை, அவர்களுக்கு அறிமுகமான ஊழியர்கள் அறிமுகப்படுத்த அவர்களுக்கும் கொடுத்தார்கள். செய்திப் புத்தகங்களையும் அவ்வப்போது பாரபட்சமில்லாமல் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் அனுப்பிவைக்கிறார்கள். நான் அறிந்த மட்டில் இங்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடே கிடையாது.

25. என்னைப் பொறுத்த அளவில், என்னிடம் **E book** இல்லாமலே, கர்த்தர் என்னிடம் ஒப்புவித்த ஊழியத்தை, அவர் கொடுத்த ஆவிக்குரிய பொக்கிஷங்களைக் கொண்டு, திறமையாக என் ஊழியத்தை நான் நிறைவேற்ற முடியும், நிறைவேற்றியும் வருகிறேன். வெளிநாட்டு விசுவாசிகள் பல கஷ்டங்கள் மத்தியில், மிக்கப் பிரயாசப்பட்டு, பணம் சேகரித்து, நம் நாட்டில் உள்ள ஊழியர்களுக்கு அவர்கள் ஊழியங்களில் உதவியாயிருக்க இப்படிப்பட்ட **E book** களை விலைக்கு வாங்கி நன்கொடையாக அனுப்புகிறார்கள். ஆனால் சகோ.டோனி மற்றும் சகோ.தயானந்தம் போன்றவர்கள் தங்களுக்கு ஜால்ரா அடிக்கும் ஊழியர்களுக்கும், விசுவாசிகளுக்கும் கொடுத்து தங்களுக்கென்று ஒரு குருப் மனுஷர்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இவர்களைக் கொண்டு தங்கள் தில்லுமுல்லுகளை மற்றும் தவறுகளை மறைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த மாய்மாலக்குணம் எங்கிருந்து வந்தது? அதுதான் சர்ப்பத்தின் வித்து.

26. **WBGNS** ன் நடத்தைகளுக்கு மேலும் சில சம்பவங்களை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். **Dr.S.C.**ஜக்கப் நித்திரையடைந்த பின் சகோ.டோனி பொறுப்பு ஏற்றார். **Dr.**ஜக்கப் எனக்கு **நாம் ஏன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும்?** என்ற கைப்பிரதியை **WBGNS** பிரஸ் ல் பிரிண்ட் பண்ண ஆயத்தவேளைகள் அனைத்தையும் முடித்து வைத்திருந்த கால கட்டத்தில் நித்திரையடைந்தார். சகோ.டோனி பொறுப்பேற்றவுடன் எனது கைப்பிரதி விபரங்களை அறிய வந்து, அவைகளை பிரிண்ட் பண்ண தடைவிதித்தார். நான், சுவிசேஷ ஊழியங்களுக்காக இந்தக் கைப்பிரதியை இங்கு பிரிண்ட் செய்வதால், அதை தடை செய்யாதீர்கள் என்று கேட்டும், மறுத்துவிட்டார். பாஸ்டர் **P.M.A.**சாமியும், இது சுவிசேஷ ஊழியத்துக்குரிய கைப்பிரதியாக இருப்பதால், மேலும் வேலைப்பாடுகள் பாதிக்குமேல் முடிந்த நிலையில் இருப்பதாலும் இந்தப் பிரிண்டை முடித்துக் கொடுத்துவிடுங்கள் என்று கேட்டும், பயன் எதுவுமில்லை. **Dr.**ஜக்கப் முடித்து வைத்திருந்த பணிகள் அனைத்தையும் அப்படியே எனக்குத் திருப்பி அனுப்பிவிட்டார்.

27. நான் கோலார் தங்க வயலில் உள்ள சகோதரி **Dr.**இந்திரா சிகாமணியை நாட, அவர்கள் செய்த பண உதவியினால் அந்தக் கைப்பிரதியை வெளியே பிரிண்ட் செய்து சுவிசேஷ ஊழியத்துக்கு உபயோகப்படுத்தினேன்.

28. **WBGNS** ல் முக்கியமான பதவியிலிருந்த பாஸ்டர் ஜெயராஜ், 1963 ல் எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டது : இனி ஞானஸ்நானம், இராப்போஜனம், ஐந்து வகை ஊழியங்கள்

எதுவும் தேவையில்லை என்ற பேய்த்தனத்துக்கடுத்த உபதேசங்களை பற்பல இடங்களுக்கு எடுத்துச்சென்று தெரிந்து கொள்ளப்படாத ஆத்துமாக்களை வஞ்சித்து வருகிறார். இதனால் அவர் மற்றும் அவரைச்சார்ந்த **WBGNS** ல் உள்ள பணியாட்கள் யாவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இப்பொழுது பாஸ்டர் ஜெயராஜ் உபதேசத்தினால் வழிதவறிச் சென்றவர்களை சரியான பாதையில் கொண்டுவரும் பணி என்ற போர்வையின் கீழ் சகோ.டோனி பற்பல இடங்களுக்குச் சென்றுவருகிறார். இவருக்குப்பின்னால் தங்களை பாஸ்டர்கள் என்று அழைத்துக்கொள்ளும் ஒரு கூட்டமும் அணிவகுத்துச் செல்லுகின்றன.

29. இப்பொழுது இந்த சகோ.டோனி யார்? இவர் கனடாவில் உள்ள சகோ.எட் பிஸ்கல் சபையில் ஒரு **Associate Pastor** ஆக உள்ளார். இந்தப் பதவி, சபையில் ஒரு டீக்கன் பதவிக்கு சமமானது. சபையில் டீக்கன் பதவி, விசுவாசிகளால் நியமிக்கப்பட்ட ஒரு பதவி. ஆனால் இவர்பின் சுற்றுகிறவர்கள் தங்களை பாஸ்டர் என்று அழைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த பாஸ்டர் யார்? கர்த்தர் தமது சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைய ஏற்படுத்தின ஐந்து வகை ஊழியத்தில் ஒருவர். அதாவது பாஸ்டர் என்பவர் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஒருவர். இப்பொழுது கவனியுங்கள், தமது சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட பாஸ்டர் என தங்களை அழைத்துக்கொள்கிறவர்கள், விசுவாசிகளால் சபையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு டீக்கன் பின்னால் சபை சீர்திருத்தப்பணி என்ற போர்வையின் கீழ் புறப்பட்டுச் செல்வதென்ன? பிரியமானவர்களே சற்று ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி நிதானித்துப் பாருங்கள். இது என்ன? மேய்ப்பன் மந்தையை மேய்க்காமல், தங்களையே மேய்த்துக்கொண்டு, சகோ.டோனி போடும் எலும்புத்துண்டுகளுக்காக அவர்பின் சுற்றித்திரிகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் ஸ்தானத்தை அறியவில்லை, தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களும் அல்ல. இவர்கள் தேவப்பிரியராயிராமல் பணப்பிரியராய், சுகபோகப்பிரியராய், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாயிருக்கிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே, உங்களை நடத்துகிறவர்கள் உங்களை மோசம் போக்காதபடிக்கு அவர்கள் பாதையினின்று விலகி, அவர்கள் வழியை விட்டுவிலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

30. இந்நாட்களில் சகோ.டோனி தலைமையில், சகோ.தயானந்தம் நிர்வாகத்திறமையில் **WBGNS** ல் நடப்பது என்ன? **WBGNS** பிரஸ் ல் நவீன கம்ப்யூட்டர் பிரிண்ட் வசதிகள் உண்டு. இந்த நவீன வசதிகளை தவறான வழியில் பயன்படுத்தி, இதற்கென்று வெளியிலிருந்து வேலைகள் கொண்டுவந்து பாஸ்டர் ஜெயராஜ் ஒத்தாசையுடன் வாணிக வியாபாரம் / தொழில் நடந்து வந்தது. நமது நாட்டின் சட்ட திட்டங்களை மீறி இந்த கள்ளக்காதல் நடந்து வந்தது. இந்தத் தொழிலினால் வரும் வரவு செலவுகளைக் காட்டாமல் தாராள மனதுடன் சம்பந்தப்பட்டவர்கள் பணம் சம்பாதித்தனர். சகோ.டோனி அன்று எனது சுவிசேஷ ஊழியத்துக்கு தேவையான ஞானஸ்நான கைப்பிரதியை இந்தப் பிரஸ் ல் பிரிண்ட் பண்ணக்கூடாது எனக்கூறி அரைகுறைப் பணியில் நிறுத்திவிட்டார். ஆனால் உலகப்பிரகாரமான வாணிகத்தொழில் மும்முரமாக நடந்தது. ஆக **WBGNS** பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.

31. 1963 ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது என்ற உபதேசத்தினால் எழுந்த பிரச்சனைகளினால் பாஸ்டர் ஜெயராஜ் மற்றும் அவரது சகாக்கள் தங்கள் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப் பட்டனர். இப்பொழுது அவரும், அவரை சார்ந்தவர்களும் தேவபக்தியின் வேஷத்தைத்தரித்தவர்கள் என்பதை உறுதிப்படுத்த பல லட்சங்கள் **WBGNS** லிருந்து **Royalty / Good will** ஆக கேட்கிறார்கள். மேலும் தராத பட்சத்தில் லேபர் கோர்ட் சென்று விடுவோம் என்றும், கள்ளத்தனமாக நடந்த வியாபாரத்தை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தி விடுவோம் என்றும், இங்கு நடக்கும் எல்லா தில்லுமுல்லுகளையும் அம்பலமாக்கி விடுவோம் என்றும் மிரட்டுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.

32. **ஓ! WBGNS யே உன் உள்ளங்கால் தொடங்கி, உன் உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை. அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுள்ளதாயிருக்கிறது. அது சீழ் பிதுக்கப் படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலுமிருக்கிறது. ஆதலால் நீ உன்னைக் கழுவி சுத்திகரிக்கமாட்டாயா? தேவனுடைய நாமம், இக்காலத்துக்குரிய செய்தி, தேவனுடைய மணவாட்டி சபை உன்னால் தூஷிக்கப்படுகிறதே. நீ உன்னை வளர்த்து, ஆதரித்த கர்த்தரை மகிமைப்படுத்த மனந்திரும்ப மாட்டாயா?**

33. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்களெல்லாரோடுங்கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

ஜனவரி , 2001

கிறிஸ்துவின் அன்பில்,
**சகோ.காலேப் யோசுவா.**